**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 28 / 2023**

**வா.சா.2 – பாக்கியம்** **21.08.2025**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை வாதி கேட்டுக்கொண்டதன்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி புவனேந்திரன் எனது தூரத்து உறவினர் மற்றும் பக்கத்துவீட்டில் குடியிருந்து வருகிறார். வாதியின் வீடு மற்றும் எனது வீடு உள்ள பகுதி அரசுக்கு பாத்தியப்பட்ட கிராம நத்தம் என்றால் சரிதான். வாதிக்கு பூர்வீகம் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கொத்தன்குளம் ஆகும். நான் சுமார் 50 வருடங்களாக தாவா சொத்தின் அருகில் குடியிருந்து வருகிறேன். வாதி குடியிருக்கும் தாவா சொத்தின் சர்வே எண் 49/2 ஆகும். எனது நிரூபண வாக்குமூலத்திலும் புல எண் 49/2 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தின் சர்வே எண் புல எண் 49/2 என தவறாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் முழு விபரமும் தெரியாமல் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15 ஆவணம் 06.11.2024ல் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள பகுதியில் பட்டா வழங்குவதற்காக அரசு நடவடிக்கை எடுத்துவரும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் வாதி 40 வருடங்களாக தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 50 வருடங்களாக குடியிருந்து வருவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்தின் அருகில் உள்ள எனது வீடு சம்மந்தமாக சிவகங்கை தேவஸ்தானம் அ.வ.எண்.21/2017 என்ற வழக்கை மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அதுபோல சிவகங்கை தேவஸ்தானம் இந்த வாதியின் மீதும் பாண்டியம்மாள் என்பவர் மீதும் தனித்தனியாக மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் குடியிருக்கும் வீட்டை காலிசெய்து சிவகங்கை தேவஸ்தானத்திடம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பானது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் என்ன தீர்ப்பானது என்றால் ஏற்கனவே வாடகை சிவகங்கை தேவஸ்தானத்திற்கு செலுத்தி வந்தது போல தொடர்ந்து வாடகை செலுத்த வேண்டும் என்று தீர்ப்பானது. மேற்படி வழக்கில் வாடகை பாக்கி செலுத்தவும் பரிகாரம் கேட்டிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பின் மீது இந்த சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த அசல் வழக்கிலும் மேல்முறையீட்டு வழக்கிலும் இந்த வாதி புவனேந்திரன் தான் வழக்கறிஞர் ஏற்பாடு செய்தார். அதனால் இரண்டு வழக்குகளிலும் என்ன தீர்ப்பானது என்று எனக்கு தெரியாது. சிவகங்கை தேவஸ்தானம் தாக்கல் செய்த அசல் வழக்கில் நான் ஏற்கனவே வாடகை செலுத்திவந்தேன் தற்போது செலுத்தவில்லை என்று எதிர்வாதம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு முடிந்த பின்பு

உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணம் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை ஆகும் இ,ன்றுவரை பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்துக்கள் சம்மந்தமாக அரசாங்கத்திற்கும் தேவஸ்தானத்திற்கும் இடையே மாவட்ட வருவாய் அலுவலர் முன்பு நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் வழக்கிற்கு பின்பு ஏற்பட்ட ஆவணம் என்பதால் அதன்அடிப்படையில் எனக்கு எந்தவித உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானும், வாதி புவனேந்திரனும் சேர்ந்து கொண்டு 4ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கில் சொத்தின் சுவாதீனத்தை 4ம் பிரதிவாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்று தான் வாதி மீதும் என் மீதும் தீர்ப்பானது என்றும் அதை மறைத்து வாடகை மட்டும் செலுத்த வேண்டுமென தீர்ப்பானதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை